இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 305 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 02 – செவ்வாய்க்கிழமை 16 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 305 : Thiruvalluvar Year - 2057 - Aani 02 - Tuesday 16 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


### பெண் போலீசுக்கு கூட்டு பாலியல் கொடுமை!

## சட்டம் - ஒழுங்கைக் கவனிங்க சி.எம். சார்!

### கழக தகவல் தொழில்நுட்ப அணி கண்டனம்!

சென்னை, ஜூன் 16 -

தமிழ்நாட்டுல இன்னைக்கு பெண் காவலருக்கே பாதுகாப்பு இல்லாத ஒரு கேவலமான சூழல் உருவாகி இருக்கு. சட்டம் ஒழுங்குன்னா என்ன விலை, அதை எந்த கடையில வாங்கலாம்னு கேக்குற அளவுக்குத் தமிழ்நாட்டோட நிலைமையை இந்த நிர்வாகத் திறமையற்ற ரீல்ஸ் அரசாங்கம் ரொம்பவும் மோசமாக்கி வச்சிருக்கு.

பெண்கள் பாதுகாப்பு, பெண்கள் முன்னேற்றம்னு மேடைக்கு மேடை மூச்சு முட்ட மூணு தடவை வாய் கிழிய வசனம் பேசி வாந்தி எடுத்த இந்த 'டம்மி CM', ஆட்சியில சீரழிஞ்சு கிடக்கிற சட்டம் ஒழுங்கு சீர்கேட்டைப் பற்றி யாராவது சின்னதா ஒரு விமர்சனம் வச்சா கூட போதும், உடனே பதறி அடிச்சுக்கிட்டு இன்ஸ்டா இன்ஃப்ளுயன்ஸர்களைக் காசு கொடுத்துக் கூப்பிட்டு, "எங்க அமுல் பேபியைத் திட்டாதீங்க, அவரு தங்கம்"னு ரீல்ஸ் போட்டு முட்டுக் கொடுக்க வச்சிட்டு, '6 மணிக்கு மேல ஆட்டோ ஓடாது'ங்கிற மாதிரி இது பற்றியும் கவலைப்படாம ஓய்வெடுத்துக்கிட்டு இருக்காரு இந்த 'குறட்டை குமாரு'.

துப்புக் கெட்ட ஒரு விளம்பரப் வெறியர்கிட்ட நாட்டைக் கொடுத்து ஏமாந்துட்டோமேனு இன்னைக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் ரத்தக் கண்ணீர் வடிச்சு கதறிக்கிட்டு இருக்காங்க.

நேற்று சிவகங்கையில தறுதலைங்க சில பேரு பெண் காவலருக்குப் பகிரங்கமா பாலியல் தொல்லை கொடுத்திருக்காங்க. சினிமாலயும் மேடையிலயும் ஸ்கிரிப்ட் படிச்சி பஞ்ச் வசனம் பேசினதெல்லாம் போதும் சி.எம் சார்! இது நிஜ நிர்வாகம். உங்க நேரடி கட்டுப்பாட்டுல வர்ற காவல் துறையில, அதுவும் ஒரு பெண் காவலருக்கே பாதுகாப்பு கொடுக்க முடியாத மங்குனி அரசுக்கு தலைமை வகிக்கிற நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்க?

இன்ஸ்டாகிராம்லயும் சோசியல் மீடியாலயும் பி.ஆர் (PR) வேலைகளைப் பார்த்து விளம்பர அரசியல் பண்ணுறதை உடனே நிறுத்திட்டு, தமிழ்நாட்டுல முதல்ல சட்டம் ஒழுங்கைக் காப்பாத்துற வழியைப் பாருங்க குறட்டை குமார் சிஎம் சார். ஓட்டு போட்ட மக்களே வருத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு திமுக தகவல் தொழில் நுட்ப அணி சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளது.

### பாட்னாவில்

## போலீசாருடன் மாணவர்கள் மோதல்!

பாட்னா, ஜூன் 16 -

பீகார் காவல்துறையில் பல்வேறு பிரிவுகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு நேற்று தேர்வு நடைபெற்றது. இத்தேர்வுக்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இந்நிலையில், பாடலிபுத்ரா ரயில் நிலையத்தில் இத்தேர்வு எழுதச் சென்ற மாணவர்கள் குவிந்தனர். ஆனால், தேர்வு மையங்களுக்கு செல்வதற்கான ரயில்கள் குறித்த நேரத்தில் வரவில்லை. இதனால், ஆத்திரமடைந்த மாணவர்கள் ரயில்வே நிர்வாகத்தைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பியதுடன், ரயில்நிலைய அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கிருந்த போலீசார், மாணவர்களை கலைந்து செல்லுமாறு விரட்டத் தொடங்கினர். இதனால், இருதரப்பினருக்கும் இடையே வெடித்த மோதல் வன்முறையாக மாறியது. ரயில்கள் மீதும், கடைகள் மீதும் போராட்டக்காரர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர். அவர்களை கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் போலீசார் விரட்டி அடித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.





சென்னை – அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் (14.6.2026) நடைபெற்ற நிகழ்வில், தமிழக மீனவர் இயக்கத்தின் தலைவர் அந்தோணி மைக்கேல் சாரத் அவர்கள், தனது தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோருடன் தனது இயக்கத்தை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது முன்னிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்தார். இந்த இணைப்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், திமுக மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திமுக செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், திமுக தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### தமிழக மீனவர் இயக்கத் தலைவர் அந்தோணி மைக்கேல் சாரத் தலைமையில்

## பல்வேறு மீனவ அமைப்புகளைச் சேர்ந்த 1000 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

**சென்னை, ஜூன் 16 -**

**சென்னை - அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் (14.6.2026) நடைபெற்ற நிகழ்வில், தமிழக மீனவர் இயக்கத்தின் தலைவர் அந்தோணி மைக்கேல் சாரத் அவர்கள், தனது தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோருடன் தனது இயக்கத்தை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது முன்னிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்தார்.**

சென்னை - அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் பல்வேறு மீனவ அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக மீனவர் இயக்க தலைவர் அந்தோணி மைக்கேல் சாரத் தலைமையில் 1000க்கும் மேற்பட்டவர்கள் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்தவர்களை தலைவர் மு.க.ஸ்டாலின் இன்முகத்துடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்றார்.

இந்த இணைப்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தி.மு.க. செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், தி.மு.க. தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### புதுச்சேரியில்

## லாரி வாடகை கட்டணம் உயர்வு!

புதுச்சேரி, ஜூன் 16 –

புதுச்சேரி மினி லாரி உரிமையாளர்கள் மற்றும் முகவர்கள் சங்க பொதுக்குழுக் கூட்டம் மாநில தலைவர் முருகசாமி தலைமையில் மேட்டுப்பாளையம் கனரக வாகன மையத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது. அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது; புதுச்சேரியில் பல ஆண்டுகளாக லாரி வாடகை உயர்த்தப்படவில்லை. முதல் அமைச்சர் ரங்கசாமி கடந்த 5 ஆண்டுகளாக டீசல் விலையையும் உயர்த்தவில்லை. தமிழகத்தைவிட ரூ.10 குறைத்தார். தற்போது எங்களின் வாழ்வாதாரம் பல மடங்கு பாதிக்கப்பட்டுள்ளது. டோல்கேட் கட்டணம் ஆண்டுக்கு 10 முறை ஏற்றப்பட்டு பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது டீசல் விலை உயர்வால் வாகனங்களின் உதிரி பாகங்கள், டயர் உள்ளிட்டவைகள் விலையும் அதிகளவில் உயர்ந்துள்ளது. தமிழக மாநில லாரி உரிமையாளர்கள் சம்மேளனம் 25 சதவீதம் வாடகை உயர்வை அறிவித்துள்ளனர். எங்கள் சங்கத்தின் சார்பில் 15 சதவீதம் வாடகைக் கட்டணம் உயர்த்த உள்ளோம் என்றார்.

### திருவண்ணாமலையில்

## த.வெ.க. அமைச்சரை மக்கள் முற்றுகை!

திருவண்ணாமலை, ஜூன் 16 –

திருவண்ணாமலை மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள, பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேற்று முன்தினம் மாவட்டத்தில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகளை நேரில் ஆய்வு செய்தார். அதைத் தொடர்ந்து, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில், மருத்துவ மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

பின்னர் காரில் புறப்பட முயன்ற அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவை அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் உறவினர்கள் திடீரென முற்றுகையிட்டு சரமாரியாக புகார் அளித்தனர். மருத்துவமனையில் நோயாளிகளிடம் பணம் வசூலிக்கின்றனர். பிரசவ வார்டில் ரூ.1500 வரை பணம் கேட்கின்றனர். படுக்கை வசதியில்லாமல், பிரசவமான மறுநாளே பச்சிளம் குழந்தையுடன் தரையில் படுக்க வைக்கின்றனர் என்று முற்றுகையிட்டு புகார் கூறினர்.

### அமைச்சரை வைத்து முதலமைச்சர் ஒரு ரிவ்யூ மீட்டிங்காவது நடத்தியது உண்டா?

## மின் வாரியத்தின் நிர்வாகத் தோல்வியே மின்வெட்டுக்குக் காரணம்!

### முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. காட்டமான விமர்சனம்!

**சென்னை, ஜூன் 16 -**

**"மின் வாரியத்தின் நிர்வாகத் தோல்வியே மின்வெட்டுக்குக் காரணம்" என்றும் "அமைச்சரை வைத்து முதலமைச்சர் ஒரு ரிவ்யூ மீட்டிங்காவது நடத்தியது உண்டா?" என்றும் முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் காட்டமாக விமர்சித்துள்ளார்.**

இதுகுறித்து முன்னாள் மின்துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

"மாற்றத்தைத் தருகிறேன்" என்று சொல்லிமக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற தவெக அரசு தனது ஒரு மாத



கால ஆட்சியில் வாக்களித்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கிறது. 6 மணி நேரம், 12 மணி நேரம் மின்வெட்டு என தாங்கமுடியாத துயரத்தில் நள்ளிரவிலும் பொதுமக்கள் நடுத் தெருவிற்கும், சாலைகளுக்கும் வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். "சாலை மறியல் இல்லாத இரவுகள் இல்லை" என்ற நிலை மாநிலத்தின் தலைநகரிலும், மற்ற பகுதிகளிலும் இந்த ஆட்சியின் நிர்வாக அவலத்தை வீதிக்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

#### பகலில் நடக்கும் திருட்டுக்கு இரவில் எப்படி மின் தடை ஏற்படுகிறது!

"பதவியேற்றவுடன் மாற்றத்தைத் தருவேன்" என்ற பஞ்ச் டயலாக் பேசிய முதலமைச்சர் மவுனமாக இருக்கிறார். மின்வெட்டுக்குப் பதிலும் சொல்வதில்லை. பத்திரிகையாளர்களையும் சந்திப்பது இல்லை. பொறுப்பாக பதில் சொல்ல வேண்டிய மின்துறை அமைச்சரோ தினம் ஒரு Conspiracy theory எழுதி அதை ஊடகங்களிடம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார். தங்கள் நிர்வாகத் திறமை யின்மையை மறைக்க "Fake Reels" போடுவது போல் தினமும் திசை திருப்பும் வேலையை மட்டும் செய்கிறார்.

#### மக்கள் காதில் பூ சுற்றும் மின்துறை அமைச்சர்!

"ஃபியூஸ் கேரியரை திருடுகிறார்கள்" என்று சொல்லி ஒரு சிசிடிவி கேமரா வீடியோவை பதிவிடுகிறார் அமைச்சர். பகலில் நடக்கும் திருட்டுக்கு இரவில் எப்படி மின் தடை ஏற்படுகிறது? என்று சாதாரண பாமரனுக்கும் கேள்வி எழும் என்பதை அமைச்சர் யோசிக்கவில்லையா? ஃபியூஸ் திருடு போனால் மொத்தமாக தானே மின்சாரம் போக வேண்டும்? விட்டுவிட்டு போவது எப்படி? பிரச்சினையை தீர்ப்பதற்குப் பதில் அமைச்சர் கதை அளக்கிறார். கஷ்டப்படும் மக்கள் காதில் பூ சுற்றுகிறார். அடுத்து "ஹார்ட் டிஸ்க்குகள் மாயம்" என்றார். காவல்துறையே விசாரித்து அப்படி காணாமல் போன "ஹார்ட் டிஸ்குகளில்" முக்கியத் தகவல்கள் ஏதும் இல்லை என்று கூறிவிட்டது. "ஹார்ட் டிஸ்க்" திருட்டுக்கும் "கரன்ட் கட்டுக்கும்" என்ன சம்பந்தம்? மூன்றாவதாக "மின் வாரியப்பணியாளர்கள் சதி செய்கிறார்கள்" எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் களத்தில் நிற்கும் தனது பணியாளர்கள் மீதே பழி போட்டார்.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


### அசாம் மாநிலத்தில்

## 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆதார் வழங்குவது நிறுத்தம்!

### அசாம் அரசு முடிவு!

திருப்பூர், ஜூன் 16 -

அசாமில் சட்டவிரோத அகதிகள் ஆதார் அட்டை பெறுவதை தடுக்க 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு புதிதாக ஆதார் அட்டை வழங்குவதை நிறுத்த அம்மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. வங்கதேசத்தினர் சட்டவிரோதமாக ஆதார் பெறுவதை தடுக்க இம்முடிவை எடுத்துள்ளதாக முதலமைச்சர் விளக்கம். அதே நேரம் 18 வயதினருக்கு குறைவானவர்களுக்கு தொடர்ந்து ஆதார் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்

18 வயதுக்கு மேற்பட்டோர் புதிதாக ஆதார் அட்டை கோரி விண்ணப்பித்தால், அவர்களுக்கு அட்டை வழங்கப்படாது. மிகவும் அவசியமான மற்றும் விதிவிலக்கான சூழல்களில், மாவட்ட ஆணையர் (District Commissioner) மாநில அரசுக்கு முன்மொழிவு அனுப்புவார். அதை மாநில அரசு ஆய்வு செய்து தகுதியானதா என முடிவெடுக்கும்.பாதிக்கப்படாதவர்கள்: 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு ஆதார் அட்டை வழங்கும் பணி எவ்வித தடையுமின்றி தொடரும்.


பழங்குடியினர் (ST), பட்டியலினத்தவர் (SC) மற்றும் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மார்ச் 31, 2027 வரை இக்கட்டுப்பாட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு இவர்களுக்கும் 18 வயதுக்கு மேல் புதிதாக ஆதார் வழங்கப்படாது.

மாநிலத்தின் சில மாவட்டங்களில் ஆதார் அட்டைகளின் எண்ணிக்கை மக்கள் தொகையை விட நூறு சதவீதத்தைத் தாண்டியுள்ளதாகவும், வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் ஆதார் பெறுவதைத் தடுக்கவே இக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

1230

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

119

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

## வெள்ளைக்குல்லாய்களும் சளைத்தவர்கள் அல்ல!

1958-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ஆம் தேதி, கோவை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு நடைபெற்றது. காட்டூர் பகுதியில் இருந்து காலை 9 மணிக்கு ஊர்வலத்துடன் மாநாடு தொடங்கியது. ஊர்வலத்தின் முன்னே கழகத்தினர் 2,000 சைக்கிள்களில் அணிவகுத்தனர். தண்டத்தீர்வை, தண்ணீர்த் தீர்வை மற்றும் புதிய வரிகளால் கீழ் பவானி விவசாயிகள் பாதிக்கப்படுவதைச் சித்திரிக்கும் வகையிலும், இலங்கையில் தமிழர்கள் படும் அவதியைக் கண்டு பிரதமர் நேரு வாய் திறக்காமல் இருக்கிறார் என்பதைக் கண்டித்தும், தென்னகத்திற்கு வடநாடு இழைக்கும் அநீதிகளைச் சித்திரிக்கும் வகையிலும் டிராக்டர்கள் வரிசைகட்டின.

அதற்குப் பின்னால் திறந்த காரில் மாநாட்டுத் தலைவர், நிர்வாகிகள் அழைத்து வரப்பட்டனர். காலை 10.15 மணிக்கு ஊர்வலம் மாநாடு நடைபெற்ற வி.பி.ராசு நகரை அடைந்தது. அப்போது, சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.வி.பி.ஆசைத்தம்பி மாநாட்டுப் பந்தலுக்கு வெளியே கொடியேற்றி வைத்தார். அடுத்து, கோவை மாவட்டச் செயலாளர் ப.நாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர் இரா.தர்மலிங்கம் மாநாட்டைத் திறந்துவைத்தார். அடுத்து, மாநாட்டுக்குத் தலைமை வகித்த ஏ.வி.பி.ஆசைத்தம்பி, எழுச்சி உரையாற்றினார்.

மதிய உணவுக்குப் பிறகு, மீண்டும் 3.30 மணிக்கு இன்னிசை நிகழ்ச்சிகளுடன் மாநாடு தொடங்கியது. அதன் பிறகு, 'இயக்க வரலாறு' என்ற தலைப்பில், அ.பொன்னம்பலனார், 'நமது லட்சியம்' என்ற தலைப்பில் என்.எஸ்.இளங்கோ, 'சட்டமும் சமுதாயமும்' என்ற தலைப்பில், தில்லை வில்லாளன், 'திராவிடத்தின் தொழில் வளம்' என்ற தலைப்பில், எம்.பி.சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். 'தேசிய ஏடுகள்' என்ற தலைப்பில், காஞ்சி கல்யாணசுந்தரம், 'ஒரே உலகம்' என்ற தலைப்பில் டி.கே.சீனிவாசன், 'சட்டசபையில் நாம்' என்ற தலைப்பில், ஏ.கோவிந்தசாமி, 'புதிய வரலாறு' என்ற தலைப்பில், க.அறிவழகன், 'ஆதாரங்கள்' என்ற தலைப்பில் ப.உ.சண்முகம் ஆகியோர் உரைவீச்சு நிகழ்த்தினர்.

இரவு 10 மணிக்கு, கலைஞரின் 'உதயசூரியன்' நாடகம் நடைபெற்றது. இரண்டாவது நாள் காலையில் 9 மணிக்கு இன்னிசை நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்கியது. மாநாட்டிற்கு வருகைதந்திருந்த மராட்டியத்தின் பாவா சாகிப் எம்.பி.யை ஈ.வெ.கி. சம்பத் அறிமுகப்படுத்திவைத்தார். 'உழவர் கட்சி'யின் தலைவரான அவர், தி.மு.கழகத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்காக மாநாட்டிற்கு வருகைதந்திருந்தார். அதன்பிறகு, சத்தியவாணி முத்து, இரா.செழியன், என்.வி.நடராசன், மதுரை எஸ்.முத்து, கே.ஏ.மதியழகன், கோபி ஜி.என்.ராசு, 'லட்சிய நடிகர்' எஸ்.எஸ்.ராசேந்திரன் ஆகியோர் பேசினர்.

அடுத்து, 'விடுதலைப் போராட்டங்கள்' என்ற தலைப்பில் பேசிய கலைஞர், உலக நாடுகளின் விடுதலைப் போராட்டங்களைப் பற்றிக் கூறினார். நாகர்களின் விடுதலைப் போராட்டத்தை எடுத்துச்சொல்லி, காஷ்மீரிகளின் நிலையைப் புரியவைத்து, தி.மு.கழகத்தின் 'திராவிட நாடு' கோரிக்கையை விவரித்தார். தூத்துக்குடி இடைத்தேர்தலுக்கு நிதி அளிப்பீர்களா என கலைஞர் கேட்டபோது, மொத்தக் கூட்டமும் 'கொடுப்போம், கொடுப்போம்' என்றது. மதிய உணவுக்குப் பிறகு மாநாடு கூடியதும் பலர் பேசினர். அதன்பிறகு, 40 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

பின்னர், இடைத்தேர்தல் நிதி திரட்டப் பட்டது. அதன்பிறகு, மராட்டியத்தின் பாவா சாகிப் பேசும்போது, "வெள்ளைக்காரர்கள் ஆண்டதைவிட, இந்த வெள்ளைக்குல்லாய்கள் நடத்தும் அரசாங்கம் கொடுமையில் குறைந்தது அல்ல. இங்கு வந்து, உங்கள் அண்ணாவைப் பார்த்து பேசியதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். அழைப்பு விடுத்தார். அதன்பிறகு நாவலரும் பேரறிஞர் அண்ணாவும் உரையாற்றினர். இரவு 9 மணிக்கு மாநாடு முடிவுற்றது

....கூட்டம் திரளும்

## ஆம்னி பேருந்துகள் மீண்டும்...

ஆம்னி பேருந்துகளை மீண்டும் கோயம்பேட்டிலிருந்து இயக்க அனுமதித்திருப்பது, த.வெ.க.வின் முதல் வெளிப்படையான ஊழல் என முகநூலில் தனது கருத்தினைப் பகிர்ந்துள்ளார், மார்த்தாண்டன் சந்திரகேசன் என்பவர். அவரது பதிவில்,

"இந்த இட மாற்றத்தால் தனியார் ஆம்னி நிறுவனங்களின் தொழில் பல மடங்கு உயரும்! காரணம்: அரசுப் பேருந்துகளில் ஏற கிளாம்பாக்கம் வரை போகணும்; ஆம்னி பேருந்து என்றால், இங்கேயே ஏறிவிடலாம் என்று 500 ரூபாய் வரை அதிகம் கொடுக்க மக்கள் தயாராவர்!

விளைவு? மறுபடியும் நகருக்குள் இரவு ஆனாலே, மூச்சுமுட்டும் போக்குவரத்து நெரிசல்!

தாம்பரம் மற்றும் அதைத் தாண்டியும் வாழும் மக்கள், சென்னை நகருக்குள் வந்துபோக உருவாக்கிய சாலை, 'இன்னர் ரிங் ரோடு' எனும் ஜவஹர்லால் நேரு ரோடு! ஆனால், அதில் இப்போது ஏகப்பட்ட வண்டிகள் பெட்ரோல்/டீசலை வீணாக்கி, பெருமூச்சு விட்டுக்கொண்டு இந்த ஆம்னி பேருந்துகளின் பின்னால் கடும் போக்குவரத்து நெரிசலால் நெடுநேரமாய் நின்றுகொண்டிருப்பதைக் காண முடிகிறது!

இரவு மணி 8 ஆகிவிட்டாலே, சாலை தமக்கு மட்டுமே சொந்தம் என்று நினைப்பவர்கள், இந்த ஆம்னிபஸ் ஓட்டுநர்கள். இந்த போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்காகத்தானே, எக்ஸ்பிரஸ் பஸ் டெர்மினஸ், நகரை விட்டுத் தள்ளி இருப்பது நல்லது என்று அ.தி.மு.க. ஆரம்பித்து, தி.மு.க. கிளாம்பாக்கம் நிலையத்தைக் கட்டி முடித்தது? அது இனி டோட்டல் வேஸ்ட்டா?

ஆரம்பத்தில் சிரமமாக உணர்ந்தாலும் மக்கள் இப்போது கிளாம்பாக்கத்துக்குப் பழக்கப்பட்டுவிட்டனர். அதை, ஆம்னி பேருந்துகளின் லாபத்துக்காக மாற்றுவதா? சென்னையில், வாழ்பவர்கள் தினம் போக்குவரத்து நெரிசலில் அவதிப்படுவதுதான் அவர்களின் மாறாத தலையெழுத்தா? ஒவ்வொரு நாளும் வீணாகும் எரிபொருள் மதிப்பு எவ்வளவு?' என கருத்திட்டுள்ளதுடன், 'இந்த ஊழல் இன்னும் கொஞ்ச நாளில் பெரிதாக வெடிக்கும் பாருங்கள்' எனவும் குறிப்பிட்டுள்ளார். காத்திருப்போம்.

## ஃப்ளாஷ்பேக்


வி.கிருஷ்ணமூர்த்தி



### பிறந்தநாள் அன்று கின்னஸ் சாதனையுடன்...

2009-ஆம் ஆண்டு, நான் 'சிவப்பு மழை' என்ற திரைப்படத்தை இயக்கினேன். அந்தத் திரைப்படம் பன்னிரண்டு நாள்களுக்குள் (கதை, திரைக்கதை எழுதுவதில் தொடங்கி, நான்கு பாடல்கள் இசையமைப்பது, தலைப்பு, படப்பிடிப்பு 60 காட்சிகளை இரண்டு மணி நேர முழுநீளத் திரைப்படமாகப் படத்தொகுப்பு செய்தல் ஆகியவை நடைபெற்றன). எடுக்கப்பட்டு, கின்னஸ் உலக சாதனை புரிந்தது. அதற்காகப் பெறப்பட்ட சான்றிதழுடன், அந்த ஆண்டு ஜூலை மாதம் 17-ஆம் தேதி, எங்களது குழுவுடன் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அன்று என்னுடைய பிறந்தநாள் என்பதால், அவரிடம் வாழ்த்துப் பெற்றது கூடுதல் மகிழ்ச்சி அளித்தது.

– இயக்குநர் வி.கிருஷ்ணமூர்த்தி, பெங்களூர்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

119

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## பேரறிஞர் காட்டும் பாதை!

தி.மு.கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே, 15 இடங்களைப் பிடித்தது. இவர்களில் முத்தமிழறிஞர் கலைஞர் தவிர, மற்ற அனைவரும் 1962-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிவாய்ப்பை இழந்தனர். பேரறிஞர் அண்ணா, காஞ்சிபுரம் தொகுதியில் தோல்வியுற்றார். கழகம் அந்தத் தேர்தலில், 50 இடங்களை வென்று வலிமையுடன் சட்டமன்றம் நுழைந்தபோதும், பேரறிஞர் அண்ணாவின் தோல்வி, கழகத்தினருக்குப் பெரும் சோகத்தையும் வெற்றி உற்சாகத்தையும் குறைத்திருந்தது.

தேர்தல் முடிவுக்குப் பின்னர் பெங்களூரு சென்றிருந்த அண்ணா, அங்கிருந்து தன் தம்பிகளுக்கு எழுதிய கடிதங்கள் தன்னிகரற்றவை. தோல்வியில் இருந்த தன்னையும் தேற்றிக்கொண்டு, ஒரு இயக்கத்தின் தலைவராகத் தன் தம்பிகளையும் தேற்றும் வல்லமை அக் கடிதங்களில் வெளிப்படும். ஏற்கெனவே வென்ற தொகுதிகளில் தோல்வியுற்றதற்கு, நியாயமான காரணங்களையும் பட்டியல் இட்டிருப்பார். அன்றைய ஆளும் காங்கிரஸ் கட்சி, கழகத்தின் வளர்ச்சி கண்டு அஞ்சியதை எடுத்துக் கூறி இருப்பார். அவர் தோற்றிருந்தாலும், 50 கழகத் தோழர்களின் வெற்றி ஏன் முக்கியமானது என்பதை மிக விரிவாக விளக்கி இருப்பார்.

1962-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா தன் தம்பிகளுக்கு எழுதிய நான்கு கடிதங்கள் 'அறுவடையும் அணிவகுப்பும்' எனும் சிறு நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. நாம் யாரும் சற்றும் எதிர்பார்த்திராத 2026 தேர்தல் முடிவுகளில் இருந்து மீளவும், நம்மை நாமே தேற்றிக்கொண்டு துடிப்புடன் பணியாற்றவும், இந்தச் சிறு நூல் துணைபுரியும்.

முதல் கடிதத்தில், காஞ்சிபுரத்தில் தான் தோல்வியுற்ற தற்கான காரணங்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் அலசுகிறார். பெருமாள் மீது சத்தியம் வாங்கிக் கொண்டு வாக்கு சேகரித்தது, வாக்குக்குப் பணத்தை வாரி இறைத்தது என காங்கிரஸ் கட்சியின் தந்திரங்களை வெளிப்படுத்தி, எழுதி உள்ளார்.

இரண்டாவது கடிதத்தில், புனிதப்போரின்போது ஜெருஜெருசலேம் நகருக்குள் அணிவகுத்துச் சென்ற கிறிஸ்தவர்களுக்கு சாலடீன் அனுமதி அளித்து, போர் நிறுத்த ஏற்பாட்டுக்கு இசைவு அளித்ததையும், ஆனால் அந்த அணிவகுப்பை வழிநடத்திச் சென்ற ரிச்சர்டுக்கு ஜெருசலேம் நகருக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதையும் உதாரணமாகக் காட்டி, 1962-ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை இதனுடன் ஒப்பிடுகிறார்.

மூன்றாவது மற்றும் நான்காவது கடிதங்கள், இந்த வெற்றிக்குப் பணியாற்றியவர்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்றும், சட்டமன்றம் நாடாளுமன்றம் செல்வதைக் காட்டிலும் நாம் கொண்ட கொள்கைக்காகச் சிறைச்சாலை செல்லத் தயாராக இருக்க வேண்டும் என்று நிறைவுசெய்கிறார்.

இந்தத் தொகுப்பின் இறுதி வரிகள் இப்படி நிறைவுறுகின்றன. "ஆம்! ஆருயிரைப் பலியிடவும் அஞ்சாது நிற்கிறோம்! தாயின் கரத்தில் பூட்டப்பட்டுள்ள தளைகள் பொடிபட, எமது உடல் ஆவியற்ற கூடாயினும் பரவாயில்லை. இன்னுயிரை எடுத்துக்கொள்ளுங்கள், இன்பத் திராவிடத்தைக் கொடுங்கள்!"

கொள்கைகளே முதலென பேரறிஞர் அண்ணா சொன்னது, அதிலே அர்த்தம் பல உள்ளது.

...வாசிப்போம்.

நூலை வாசிக்க

## கருவூலம்

### 1967-ஆம் ஆண்டு ஜூலை 23 எழுச்சி நாள்!

1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக்கு வந்ததும், 'சேலம் இரும்பாலை', 'தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம்' ஆகிய தமிழ்நாட்டுக் கோரிக்கைகளின் நியாயத்தை ஒன்றிய அரசுக்கு மேலும் வலியுறுத்தும் வண்ணம் கழகத்தின் அமைப்புகள் சார்பில், ஜூலை 23-ஆம் தேதி, 'சேலம் - தூத்துக்குடி எழுச்சி நாள்'கொண்டாடப்பட்டது. அன்று, தமிழ்நாடு முழுவதும் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கழகப் பேச்சாளர்கள் ஊர்தோறும் உரையாற்றிவந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900